FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
UNDER SECTION 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்)~~

C 8129831

1. District : மதுரை PS: தி.க.பிரிவு Year: 2025 FIR No.: 07/2025 Date: 05.05.25
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: U/S 7 (a) of PC Act
   (ii) Act சட்டம்: PC Act 1988 Sections பிரிவுகள்: 1988 as amended
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: by the PC (amendment) Act 2018.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : ① 16.04.25 at 11.00 hrs
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை ② 28.04.25 at 15.30 hrs
   Time Period : Time from : Time to : ③ 29.04.25 at 10.15 hrs
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை ④ 29.04.25 at 19.00 hrs
   (b) Information Received at PS. Date : Time : ⑤ 05.05.25 at 16.15 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.05.2025 நேரம் 19.40 hrs
   (c) General Diary Reference : Entry No(s) Time :
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.05.2025 நேரம் 20.40 hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தென் மேற்கு சுமார் 13 கி.மீ
   Beat Number : (b) Address : மாநகராட்சி கணினி வரி விதிப்பு மையம்
   முறைக் காவல் எண் - முகவரி அரசரடி, மதுரை.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : -
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : V. கார்த்திகேயன் (b) Father's/ Husband's Name : A. வைகுண்டம்
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. : -
   நாள் / பிறந்த ஆண்டு 06.04.1981 நாட்டினம் இந்தியன் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : Place of Issue : -
   வழங்கப்பட்ட நாள் - வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : பயிற்சி மேலாளர் (g) Address : 22, வங்காளம் சந்து
   தொழில் தினமலர் காம்பவுண்ட் முகவரி கீழ்தெரு, திருப்பரங்குன்றம், மதுரை
   நூலகம், மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. சிவகுமார், மில் கலெக்டர், மாநகராட்சி கணினி வரி விதிப்பு மையம், அரசரடி, மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் பக்கம் 03 முதல் 07 வரை

இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

5.5.25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 05.05.2025 21.35 hrs

Name: பெயர் தி. சீனிபாண்டி
Rank: நிலை தலைமை காவலர் 1997,
மு.த.க. பிரிவு,
மதுரை

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 05.05.2025-ஆம் தேதி இரவு 19.40 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை திருப்பரங்குன்றம், கீழத் தெரு, வங்காளம் சந்து, கதவு எண். 22 என்ற முகவரியில் வசிக்கும் வைகுண்டம் மகன் திரு. V.கார்த்திகேயன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு ஒன்றை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் V.கார்த்திகேயன், த/பெ A.வைகுண்டம், 22, வங்காளம் சந்து, கீழத் தெரு, திருப்பரங்குன்றம்,மதுரை. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை திருப்பரங்குன்றத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் M.B.A., M.Phil., படித்துள்ளேன். நான் தனியார் காப்பீடு நிறுவனத்தில் பயிற்சியாளராக பணி புரிந்து வருகிறேன். நான் 16.11.2007 ஆம் தேதி அவனியாபுரம் கிராமம் பாம்பன் நகர் விரிவாக்கத்தில் குமரன் நகர் என பெயரிடப்பட்டு பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டதில் சர்வே எண் 655/3A ல் கட்டுப்பட்ட 1800 சதுரடி கொண்ட பிளாட் எண் 13 ஐ திருமதி.மூக்கம்மாள், அவரது மகன் திரு.கணேச ராஜா மற்றும் மகள் அன்னபூரணி ஆகியோரிடமிருந்து எனது பெயரில் கிரையம் பெற்று மதுரை இணை 4 சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 11842/2007 ஆக பதிவு செய்தேன். மேலும் 17.12.2007 ஆம் தேதி அவனியாபுரம் கிராமம், பாம்பன் நகர் விரிவாக்கத்தில் குமரன் நகர் என பெயரிடப்பட்டு பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டதில் சர்வே எண் 655/3B ல் கட்டுப்பட்ட 2580 சதுரடி கொண்ட பிளாட் எண் 14 ஐ திருமதி.மூக்கம்மாள், அவரது மகன் திரு.கணேச ராஜா மற்றும் மகள் அன்னபூரணி ஆகியோர் ஸ்ரீதர் என்பவருக்கு பவர் கொடுத்து, பவர் ஏஜெண்ட் என்ற நிலையில் ஸ்ரீதர் என்பவரிடமிருந்து எனது பெயரில் கிரையம் பெற்று மதுரை இணை 4 சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 13141/2007 ஆக பதிவு செய்தேன். அந்த இரண்டு மனைக்கும் பட்டா எண் 19439 ஆகும். அது திரு.நாகு முதலியார் மற்றும் திரு.வெங்கடசாமி ஆகியோர் பெயரில் உள்ளது. அந்த பட்டாவை எனது பெயரில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பத்துள்ளேன். பின்னர் அந்த இரண்டு பிளாட்டுகளுக்கும் பொட்டல் வரி நிர்ணயம் செய்வதற்காக மார்ச் மாதம் 20 ஆம் தேதிக்கு மேல் ஹார்விபட்டியில் உள்ள மாநகராட்சி கணினி வரிவசூல் மையத்திற்கு சென்று பில் கலெக்டர் திரு.சிவகுமார் அவர்களை சந்தித்து விபரம் கேட்டேன். அவர் பொட்டல்வரி நிர்ணயம் செய்வதற்கான விண்ணப்பத்தை திருப்பரங்குன்றத்தில் திருப்பரங்குன்றம் சார்-பதிவாளர் அலுவலகம் அருகே உள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 5 அலுவலகத்திற்கு சென்று மனு கொடுக்க சொன்னார். பின்னர் நான் 03.04.2025 ஆம் தேதி மண்டலம் எண் 5

அலுவலகத்திற்கு சென்று எனது இடத்திற்கு பொட்டல் வரி நிர்ணயம் செய்வதற்கான Money Value படிவத்தை கட்டணமாக ரூ.10/- செலுத்தி பெற்றேன். பின்னர் 08.04.2025-ந் தேதி மண்டலம் எண்.5 அலுவலகத்திற்கு சென்று நான் கிரையம் பெற்ற இரண்டு பிளாட்டுகளுக்கும் வரி எதுவும் நிலுவையில் இல்லை என்பதற்கு அந்த அலுவலகத்தில் பில் கவுண்டரில் ஜீரோ பில்லை கணிணியில் பதிவிறக்கம் செய்து என்னிடம் கொடுத்தார்கள். நான் அந்த பில்களின் அசல்களையும், எனது பெயரிலுள்ள இரண்டு இடங்களுக்குரிய பத்திர நகல்கள், வில்லங்கசான்று, எனது ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை, எனது பெயரில் பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் இணைத்து மண்டலம் எண் 5 அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரியும் திரு.ஆறுமுகம் என்பவரிடம் கொடுத்தேன். அவர் எனது விண்ணப்பத்தை ஹார்விபட்டியில் உள்ள மாநகராட்சி கணினி வரி வசூல் மையத்திற்கு அனுப்பி விடுவதாக தெரிவித்தார். நான் அவரிடம் ஹார்விபட்டியில் உள்ள கணினி வரிவசூல் மையத்திற்கு எப்போது போகவேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் ஹார்விபட்டி அலுவலகத்திலிருந்து உங்களை கைப்பேசியில் அழைப்பார்கள் என்று கூறி அனுப்பிவிட்டார். பின்னர் சுமார் இரண்டு, மூன்று நாள் ஆகியும் ஹார்விபட்டி வரி வசூல் மையத்திலிருந்து போன் எதுவும் வராததால், நானே ஹார்விபட்டி வரி வசூல் மையத்திற்கு நேரில் சென்று பில் கலெக்டர் திரு.சிவக்குமார் அவர்களை சந்தித்து மண்டலம் எண் 5 அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுத்த விபரத்தை தெரிவித்தேன். அதற்கு திரு.சிவகுமார் அலுவலக கோப்புகளை பார்வையிட்டு எனது விண்ணப்பம் வந்திருப்பதை உறுதிபடுத்திவிட்டு அவர் எனது இடத்தை பார்வையிட வருவதாக கூறி, என்னை அனுப்பிவிட்டார். பின்னர் 16.04.2025 ஆம் தேதி வரை இடத்தை பார்வையிட வராததால், நான் திரு.சிவகுமார் அவர்களை சந்திக்க ஹார்விபட்டியில் உள்ள அவரது அலுவலகத்திற்கு சென்று காலை சுமார் 11 மணிக்கு நேரில் சந்தித்தபோது, அவர் என்னிடம் பொட்டல் வரி நிர்ணயம் செய்வதற்கு ரூ.15,000/- கொடுக்க வேண்டும் என்று கேட்டார். நான் அவரிடம் இது பொட்டல் வரிக்கான பணமா சார்? என்று கேட்டேன். அதற்கு அவர் தனது அலுவலக செலவுக்காக வேண்டும் என்று கூறினார். நான் அவரிடம் பார்த்து செய்யுங்கள் சார் என்று கூறினேன். அவர் என்னிடம் எனது இடத்தில் காத்திருக்கும்படி சொன்னார். நானும் எனது இடத்திற்கு சென்று காத்திருந்தேன். ஆனால் அன்று மாலை 5 மணி வரை திரு.சிவகுமார் அவர்கள் வராததால், சிறிது நேரத்தில் நான் அவரது கைப்பேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவசர வேலையாக வெளியில் சென்றுவிட்டதாகவும், மற்றொருநாள் இடத்தை பார்வையிட வருவதாக தெரிவித்தார். பின்னர் 19.04.2025-ஆம் தேதி ஹார்விபட்டியில் உள்ள கணினி வரி வசூல் மையத்திற்கு சென்று பார்த்தபோது திரு.சிவகுமார் அலுவலகத்தில் இல்லாததால் நான் அவரது கைப்பேசியில் இரண்டு முறை தொடர்பு

கொண்டு பேசியபோது, அலுவலகத்திற்கு வருவதாக சொல்லி வராததால் நான் வீட்டிற்கு சென்று விட்டேன். பின்னர் நான் எனது அலுவலக வேலையின் காரணமாக வெளியூர் சென்றுவிட்டதால், 28.04.2025 ஆம் தேதி மாலை சுமார் 3 ½ மணிக்கு ஹார்விபட்டியில் உள்ள மாநகராட்சி கணினி வரி வசூல் மையத்திற்கு சென்று திரு.சிவகுமார் அவர்களை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்தபோது அவர் என்னை அலுவலகத்திலிருந்து வெளியே அழைத்துசென்று, எனது இடத்திற்கான ஆவணங்களின் விபரங்கள் மற்றும் பட்டா விபரத்தையும் கேட்டுவிட்டு, இரண்டு இடத்திற்கும் மொத்தம் ரூ.15,000/- தனது செலவிற்கு கொடுக்கவேண்டும் என்று மீண்டும் கேட்டார். நான் அவரிடம் எனது அலுவலக வேலையை விட்டுவிட்டு அலைய முடியவில்லை, விரைவாக முடித்து கொடுங்கள் என்று கூறினேன். உடனே அவர் என்னை அவரது அலுவலகத்திற்குள் அழைத்து சென்று எனது விண்ணப்பத்தை பார்வையிட்டு எனது முழுபெயரை கேட்டார். நான் கார்த்திகேயன் என்று கூறினேன். அதற்கு அவர் உங்களது ஒரு பத்திரத்தில் கார்த்திகேயன் என்றும், மற்றொரு பத்திரத்தில் கார்த்திக் என்றும் உள்ளதே என்று கேட்டார். அதற்கு நான் எனது பெயர் கார்த்திகேயன் தான், ஆதார் அட்டையிலும் கார்த்திகேயன் தான் என்று உள்ளது. ஒரு பத்திரத்தில் தவறுதலாக கார்த்திக் என குறிப்பிடப்பட்டுள்ளது என கூறினேன். அதற்கு திரு.சிவகுமார் அவர்கள் சர்வே எண் 655/3B க்கான பத்திரத்தில் எனது பெயர் கார்த்திகேயன் என்று உள்ளதை முடித்து தருவதாக உறுதி செய்துவிட்டு, சர்வே எண் 655/3A க்கான பத்திரத்தில் எனது பெயர் கார்த்திக் என்று உள்ளதால், அந்த இடத்திற்கு பொட்டல் வரி நிர்ணயம் செய்ய முடியாது என்றும், அதற்கு சீர்திருத்த பத்திரம் பதிவு செய்த பின்னரே பொட்டல்வரி நிர்ணயம் செய்ய முடியும் என்று கூறினார். மேலும் எனது இடத்திற்கான பட்டாவை கேட்டார். நான் மனுவுடன் இணைக்கவில்லை என கூறினேன். அவர் என்னிடம் பட்டாவை எடுத்துக்கொண்டு, 29.04.2025 ஆம் தேதி காலை 9 மணிக்கு கைப்பேசியில் பேசிவிட்டு அவரை சந்திக்கும்படி கூறி அனுப்பி வைத்தார். நான் கூப்பிடுவதற்கு முன்பே 29.04.2025 ஆம் தேதி காலை சுமார் 9 மணிக்கு திரு.சிவகுமார் அவர்கள் எனது கைப்பேசியில் தொடர்பு கொண்டு எத்தனை மணிக்கு வருகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் அரைமணி நேரத்தில் ஹார்விபட்டி அலுவலகத்திற்கு வந்துவிடுவதாக தெரிவித்தேன். பின்னர் காலை 10.15 மணியளவில் நான் திரு.சிவகுமார் அவர்களை சந்திக்க திருப்பரங்குன்றம் பாலத்திலிருந்து இறங்கி ஹார்விபட்டிக்கு செல்லும் வழியில், ஹார்விபட்டி ரவுண்டானாவில் என்னை சந்தித்தபோது, நான் எனது இடத்திற்கான பட்டாவை அவரிடம் கொடுத்தேன். அப்போது அவர் என்னிடம் ஒரு இடத்திற்கு பொட்டல் வரி நிர்ணயம் செய்ய தனது செலவிற்கு ரூ.9,000/- மட்டும் கொடுங்கள் என்றும், மீதப்பணம் ரூபாய் ஆறாயிரத்தை மற்றொரு இடத்திற்கு வரி நிர்ணயம் செய்யும் போது வாங்கி

கொள்கிறேன் என்று கூறினார். நானும் பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன் என்று கூறி சென்றுவிட்டேன். பின்னர் 29.04.2025 ஆம் தேதி மாலை சுமார் 7 மணியளவில் என்னை கைப்பேசியில் தொடர்பு கொண்டு அவர் கேட்ட பணம் ரூபாய் ஒன்பதாயிரம் என்னாச்சு என்று கேட்டார். நான் அவரிடம் மாத கடைசி சார், சம்பளம் இன்னும் போடவில்லை, பணம் எதுவும் வாங்காமல் பொட்டல் வரி நிர்ணயம் செய்ய முடியுமா என்று கேட்டேன். அதற்கு அவர் தனது செலவிற்கு அவர் கேட்ட பணம் ரூ.9,000/-த்தை கொடுத்தால்தான், உங்களது மனு மீது நடவடிக்கை எடுத்து பரிந்துரை செய்து அனுப்புவேன். இல்லையென்றால் நீங்கள் அலைந்து கொண்டுதான் இருக்கவேண்டும், எனவே சீக்கிரமாக பணத்தை ரெடி பண்ணி விட்டு என்னை வந்து பாருங்கள் என கண்டிப்பாக கூறி, கைப்பேசி அழைப்பை துண்டித்துவிட்டார். பிறகு எனது வேலை பளு காரணமாக பில் கலெக்டர் சிவக்குமாரை சந்திக்க இயலவில்லை. இன்று (05.05.2025) மாலை சுமார் 4 ¼ மணிக்கு ஹார்விபட்டி வரி வசூல்செய்யும் மையத்திற்கு சென்று, அங்கிருந்த பில்கலெக்டர் திரு.சிவக்குமார் அவர்களை பார்த்து எனது மனு சம்பந்தமாக கேட்டேன். அப்போது அவர் என்னிடம் அதற்காக நான் கேட்ட பணம் ரூ.9,000/-த்தை கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இப்போது இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் ரூ. 9,000/-த்துடன் நாளை காலையில் 9 மணியளவில் மன்னர் காலேஜ் அருகே வந்து எனக்கு போன் செய்து, அப்பணத்தை என்னிடம் கொடுங்கள், நான் உங்கள் மனுவின் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து அதற்குரிய பொட்டல்வரியை நிர்ணயம் செய்து ஏற்பாடுகள் செய்து விரைவில் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன் என்று கூறினார். எனது பெயரில் பொட்டல் வரி நிர்ணயம் செய்வதற்கான மனுவின் மீது நடவடிக்கை எடுத்து பரிந்துரை செய்து அனுப்பி உத்தரவு கிடைக்க ஏற்பாடு செய்து தர பில் கலெக்டர் திரு.சிவகுமார் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே, எனது பெயரில் பொட்டல் வரி நிர்ணயம் செய்து எனது மனுவின் மீது நடவடிக்கை எடுத்து பரிந்துரை செய்து அனுப்பி உத்தரவு கிடைக்க ஏற்பாடு செய்து தர என்னிடம் ரூ.9,000/- லஞ்சம் கேட்கும் ஹார்விபட்டி பில் கலெக்டர் திரு.சிவகுமார் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் மதுரை இணை 4 சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 13141/2007, திரு.நாகு முதலியார் மற்றும் திரு.வெங்கடசாமி ஆகியோர் பெயரில் உள்ள பட்டா எண் 19439 மற்றும் 08.04.2025-ஆம் தேதியிட்ட எனது பெயரில் மதுரை மாநகராட்சியிலிருந்து ஜீரோ பில்லிங்காக பெறப்பட்ட இரசீது எண். 115/600/1/25-26/0000049, கொடிநாள் ரூ.100/- செலுத்தியதற்கான இரசீது எண். 115/600/1/25-26/0000050 ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும், ஹார்விபட்டி பில் கலெக்டர் திரு.சிவகுமார் அவர்கள் கேட்ட லஞ்சப் பணம் ரூ.9,000/-ஐயும்

கொண்டு வந்துள்ளேன். அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒ-ம்) XXXXXX (V.கார்த்திகேயன்) 05/5/25.

Sir, Received the typed complaint today on (5.5.25) at 19.40 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Directorate of Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 07/2025, u/s. 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 20.40 hrs and took up investigation. Sd./-XXXXXX (T.Suriyakala) 05.05.2025, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr.V. Karthikeyan, S/o.A.Vaigundam, No. 22, Vangalam Santhu, East Street, Thirupparangkundram, Madurai along with Xerox copies of Doc. No. 13141/2007 of Joint IV Sub-Registrar, Madurai, Patta No. 19439 in the name of Nagu Muthaliyar and Venkatasamy and Zero Billing Receipt No. 115/600/1/25-26/0000049 and Flag Day Receipt No. 115/600/1/25-26/0000050 of Madurai Corporation, Dated: 08.04.2025 in the name of V.Karthikeyan are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

05-05-2025

(T. Suriyakala)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.